# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 61

நவம்பர் 2013

தொகுப்பு: Dr. B. வில்லியம் தர்மராஜா

**மத்தேயு**

3001 தசமபாகம் செலுத்துகிற நீ, விசேஷித்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டுவிடாதே (23:23)

3002 மனுஷருக்கு நீதிமான் என்று புறம்பே காணப்படுகிற நீ, உள்ளத்தில் மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறாயோ? (23:28)

3003 "ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (24:5, மாற். 13:5,6, லூக். 21:8)

3004 யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள், கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள் (24:6)

3005 முடிவுபரியந்தம் நிலைநில். நீயே இரட்சிக்கப்படுவாய் (24:13, மாற். 13:13)

3006 இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார்; அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதே (24:23, மாற். 13:21)

3007 ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீ அறியாதிருக்கிற படியினால் விழித்திரு. (24:42); விழித்திருந்து ஜெபம் பண்ணு (மாற். 13:23)

3008 நீ நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீ ஆயத்தமாயிரு (24:44); உன்னைத் தூங்குகிறவனாகக் காணாதபடிக்கு விழித்திரு. (மாற். 13:36)

3009 ஏற்றவேளையிலே உன் வேலைக்காரருககுப் போஜனங்கொடு (24:45)

3010 உண்மையும் விவேகமுள்ள ஊழியக்காரனாயிரு. (24:45)

3011 மணவாளனோடே கூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிரு. (25:10)

3012 மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீ அறியாதிருக்கிற படியால் விழித்திரு. (25:13)

3013 உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரனாயிரு. (24:21,23)

3014 கொஞ்சத்திலே உண்மையாயிரு, அநேகத்தின் மேல் அதிகாரியாக வைப்பார். (25:21,23)

3015 பொல்லாதவனும சோம்பலுமான ஊழியக்காரனாயிராதே (25:26)

3016 பசியாயிருக்கிறவனுக்குப் போஜனங்கொடு (25:35)

3017 தாகமாயிருக்கிறவனுக்குத் தாகத்தைத் தீர். (25:35)

3018 அந்நியனை சேர்த்துக்கொள (25:35)

3019 வஸ்திரமில்லாதிருக்கிறவனுக்கு வஸ்திரங்கொடு (25:36)

3020 வியாதியாயிருக்கிறவனை விசாரிக்கப்போ (25:36)

3021 காவலிலிருக்கிறவனைப் பார்க்கப்போ (25:36)

3022 மிகவும் சிறியவர்களுக்கு எதைச் செய்கிறாயோ, அதை கிறிஸ்துவுக்கே செய்கிறாய் (25:40); மிகவம் சிறியவர்களுக்கு எதைச் செய்யாதிருப்பாயோ, அதை கிறிஸ்துவுக்கே செய்யாமலிருக்கிறாய் (25:45)

3023 நற்கிரியையைச் செய் (26:10, மாற். 14:6)

3024 இயேசுவை மறுதலியாதே (26:34,35,70,72,74,74) (மாற். 14:30,31,68,70,72)



3025 சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணு; ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது (26:41, மாற். 14:38)

3026 பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள் (26:52)

3027 கேட்கும் கேள்விக்கு / குற்றஞ்சாட்டுகையில் (இயேசுவைப்போல) பேசாமலிரு (26:63, 27:12,14, மாற் 14:61, 15:3,5); (இயேசுவைப்போல) கொஞ்சமாக பேசு (26:64, 27:11, மாற். 14:62, 15:2)

3028 தூஷியாதே (27:40, மாற். 15:30)

3029 பரியாசம் பண்ணாதே (27:41, மாற். 15:31)

3030 நிந்தியாதே (27:44, மாற். 15:32)

3031 பயப்படாதே (28:5,10)

3032 "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (28:19,20)

**மாற்கு**

3033 காலம் நிறைவேறிற்று; தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசி (1:15)

3034 என் பின்னே வா, உன்னை மனுஷரைப் பிடிக்கிறவனாக்குவேன் (1:17)

3035 அதிகாலையில், இருட்டோடே எழுந்து ஜெபம் பண்ணு. (1:35)

3036 பிணியாளிகளுக்கு வைத்தியன் தேவை (2:17)

3037 உபவாசம் பண்ணு (2:20)

3038 பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷணஞ் சொல்லாதே (3:29)

3039 தேவனுடைய சித்தத்தின்படி செய் (3:35)

3040 இருதயத்தில் விதைக்கப்பட்ட வசனத்தை சாத்தான் எடுத்துப்போட இடங்கொடாதே (4:15, லூக். 8:12)

3041 வசனத்தினிமித்தம் உபத்திரமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடையாதே (4:17)

3042 வசனத்தைக் கேட்டும், உலகக் கவலைகளும் ஐசுவரியத்தின் மயக்கமும் மற்றவைகளைப் பற்றி உண்டாகிற இச்சைகளும் வசனத்தை நெருக்கிப் பலனற்று போக இடங்கொடாதே (4:18)

3043 வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, பொறுமையுடனே பலன் கொடு (4:20, லூ. 8:15)

3044 எந்த அளவினால் அளக்கிறாயோ, அந்த அளவினால் உனக்கும் அளக்கப்படும். (4:40)

3045 ஏன் இப்படி பயப்படுகிறாய்? ஏன் உனக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று. (4:40)

3046 நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி. (5:19)

3047 உன் விசுவாசம் உன்னை இரட்சிக்கும் (5:34, லூக். 18:42)

3048 பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு (5:36)

3049 அவிசுவாசம் கொள்ளாதே (6:6)

3050 மனந்திரும்பு (6:12)

# நான் தேவனோடு நான் தேவனுக்காய்

சகோ. S. ஜெபராஜ் President, Grace Ministries

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இன்ப நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். ஒவ்வொரு மாதமும் புதிய தீர்மானம் எடுத்து இன்னும் கிறிஸ்துவோடு நெருங்கி ஜீவிக்க, அநேகருக்கு முன்மாதிரியாய் வாழ தேவன் உங்களுக்கு கிருபை செய்து வருகிறதற்காய் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். உங்களுடைய வாழ்க்கையின் எந்தச் செயல்களும், சூழ்நிலைகளும் கிறிஸ்துவோடு உங்களுக்கு உள்ள தொடர்பை பிரிக்காவண்ணம் எப்பொழுதும் ஜாக்கிரதை உள்ளவர்களாய் இருங்கள்.

நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா எருசலேமுக்கு வந்து அதை முற்றுகை போட்டான். இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தார்களிலும், துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும் அறிவில் சிறந்தவர்களும் கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய வாலிபரைத் தன்னுடைய தேசத்திற்கு கொண்டு வந்தான். அவர்களுக்கு கல்தேயரின் எழுத்தும் பாஷையும் கற்றுக்கொடுக்கவும், ராஜா தான் உண்ணும் போஜனத்திலேயும் குடிக்கும் திராட்சரசத்திலேயும் தினம் ஒரு பங்கை அவர்களுக்கு கொடுக்கவும் நியமித்தான். அவர்களில் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தார்கள். தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்ச ரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று தன் இருதயத்தால் தீர்மானம் பண்ணிக் கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான். (தானி. 1:1-8).

## பரிசுத்தத்தில் வைராக்கியமுள்ள தானியேல்

தானியேலும் அவனுடைய நண்பர்களாகிய சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களும் ஒரு தீர்மானம் செய்தார்கள். எந்த ஒரு பழக்க வழக்கமும் தேவனுடைய ஐக்கியத்தின் உறவைவிட்டு பிரிக்கக்கூடாது என்பதில் கருத்தாய் இருந்தார்கள். இந்த தானியேல் உணவு முறை கூட தன்னை தீட்டுப்படுத்தக்கூடாது என்பதற்காய் ராஜாவின் போஜனத்தையும், பானத்தையும் விலக்கி, எளிய உணவை உட்கொள்ள வைராக்கியம் உள்ளவராய் இருந்தார். இன்றை வாலிபர்கள் ஏதேதோ உலகக் காரியங்களில் வைராக்கியம் பாராட்டுகிறார்கள். இன்றைய இளைஞர்களின் கலாச்சாரம், பண்பாடு, மனநிலை, செயல்பாடுகள் எல்லாம் தீய வழிகளுக்கும், அழிவின் பாதைக்கும் நேராக விரைந்தோடுகிறது. நற்செயல் புரிவதில் ஆர்வமும் வைராக்கியமும் காட்ட வேண்டியவர்கள் மாறான செயல்களில் துரிதம் காட்டுகிறார்கள். தேவனுடைய பரிசுத்த நாமத்திற்காய் வைராக்கியம் (எசே. 39:26) பாராட்டுகிறவர்கள் தேவை. எதிர்த்து நின்று தூஷித்த கிரேக்கக்கருக்கும், யூதருக்கும் முன்பாக பவுல் ஆவியில் வைராக்கியம் கொண்டு



இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்கு திருஷ்டாந்தப்படுத்தினாரே பாருங்கள். (அப். 18:5)

அறிவுக்கேற்ற வைராக்கியமல்லாத (ரோ. 10:2) காரியங்களை விட்டு விலகு. உங்கள் இருதயத்தில் கசப்பான வைராக்கியம் கொள்ளாதிருங்கள் (யாக். 3:14). நீங்கள் தீட்டானதொன்றும் புசியாதபடி எச்சரிக்கையாயிருங்கள் (நியா. 13:4). உங்களை பரிசுத்தமாய் காத்துக் கொள்ளுவதிலே தீர்மானமாய், வைராக்கியமாய் செயல்படுங்கள்.

## ஞானமுள்ள தானியேல்

தானியேல் சகல ஞானத்தில் தேறினவரும், அறிவில் சிறந்தவரும், கல்வியில் நிபுணரும் ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவராகவும் இருந்தார். (தானி. 1:3). தன்னைத் தீட்டுப்படுத்துகிற ராஜபோஜனத்தை புசியாது, பருப்பு முதலான மரக்கறிகளை புசித்தாலும், முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது. (தானி. 1:15). தேவன் எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார். (தானி. 1:17). ஞானத்துக்கும், புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும், ஜோசியரிலும் அவர்களைப் பத்துமடங்கு சமர்த்தராகக் கண்டான் (தானி. 1:20). ஞானம் எங்கேயிருந்து வரும்; புத்தி தங்கும் இடம் எங்கே? (யோபு 28:20) இதோ ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி (யோபு 28:28). கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி. 1:7). உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால் முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ள வனாயிருக்கிறேன். (சங். 119:100). நீயும் கர்த்தருக்குப் பயந்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு ஞானத்தைப் பெற்றுக்கொள். தானியேல் தன்னைப் பரிசுத்தமாய் காத்துக் கொள்ளுவதில் ஜாக்கிரதையுள்ளவனாயிருந்தபடியால், தேவன் அவனுக்கு ஞானத்தைக் கொடுத்தார். ஞானமடைந்து உன் இருதயத்தை நல்வழியிலே நடத்து (நீதி. 23:19). மதுபானத்தால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல. (நீதி. 20:1). அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. (கொலோ. 2:3). கர்த்தர் சாலமோன் ராஜாவினிடத்தில் இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி : நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னபோது, ஜனங்களை நியாயம் விசாரிக்கவும் நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும் என்று வேண்டிக் கொண்டார். (1இரா. 3:5,9). தன்னிடத்தில் கேட்கிறவனுக்கு சம்பூரணமாய் ஞானம் கொடுக்கிற தேவன், நீ சந்தேகப்படாமல் விசுவாசத்தோடு கேட்டால் அப்படியே அருளுவார். (யாக். 1:5,6)

## ஜெபிக்கும் தானியேல்

சிறைபிடிக்கப்பட்டு கொண்டு வரப்பட்ட தானியேல், இப்பொழுது 120

தேசாதிபதிகள் கணக்கு ஒப்புவிக்கிறதற்காக அவர்களுக்கு மேலான மூன்று பிரதானிகளில் ஒருவனாயிருந்தான். (தானி. 6:1,2). தானியேல் பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாயிருந்தான். ஜெபிக்கிற தானியேலாக மாத்திரமல்ல, அவனுக்குள்ளே ஒரு விசேஷித்த ஆவி இருந்தது. (தானி. 6:3) என்பதாகக் காண்கிறோம். அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை. முப்பது நாள் வரையில் ராஜாவைத்தவிர யாரையும் வணங்கக்கூடாது என்று சட்டம் பிறப்பிக்கப்பட்டபோதும், தானியேல் தான்முன் செய்து வந்தபடியே தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான. (தானி. 6:10). சிங்கங்களின் கெபியில் தானியேல் போடப்பட்டபோது, தரியு ராஜா காலமே வந்து துயரசத்தமாய் தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே என்று அழைக்கிறார். அவன் தன் தேவன் பேரில் விசுவாசித்திருந்த படியால் அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை. (தானி. 6:23). இப்பொழுதும் ராஜ கட்டளை பிறப்பிக்கப்படுகிறது என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கி பயப்படவேண்டும். அவர் ஜீவனுள்ள தேவன்; அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவு பரியந்தம் நிற்கும். தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது. (தானி. 6:26,28).

பரிசுத்தத்தில் வைராக்கியமாயிருந்து, ஞானத்தில் நிறைந்து தேவஆவியினால் நிரப்பப்பட்டு ஜெபவீரனாயிருந்த தானியேலை தேவன் எவ்வளவாய் கனப்படுத்தி உயர்த்தினார். சோதனைகளும், நெருக்கங்களும், உபத்திரவங்களும் நேரிடும்போது தேவனுக்காய் தைரியமாய் நிற்பாயா? உன்னையும் ஜெயமுள்ளவனாய் மாற்றுவார்.

**எனது தீர்மானம் :** தானியேலைப் போல, அது ராஜாவின் போஜனமானாலும், என்னைத் தீட்டுப்படுத்துமானால், என்னை தேவனைவிட்டு பிரிக்குமானால், அதைவிட்டு விலகி ஓடத் தீர்மானிக்கிறேன்.

## வாழ்த்துகிறோம்!

நமது அழகப்பபுரம் பணித்தளத்தில், விசுவாச குடும்பமான திரு. பீட்டர் – திருமதி. ஜெபசாந்தி அவர்கள் மகன் செல்வன் மத்தேயு- செல்வி. மாரியம்மாளுடன் 16-9-2013 அன்று திருமணத்தில் இணைக்கப்பட்டார். மணக்களுக்காக ஜெபியுங்கள்.

## நடைபெற்ற முகாம்கள்

| | | | |
|---|---|---|---|
| சிறுவர் குதூகல முகாம்கள் | 1. | அக். 2 | புல்லலக்கோட்டை |
| | 2. | அக். 12 | வெத்தியார்வெட்டு |
| | 3. | அக். 16 | விசுவாசபுரம் |
| | 4. | அக். 20 | பரி. பேட்ரிக் ஆலய ஞாயிறு பள்ளி, தூ-டி |
| வாலிபர் வெற்றி முகாம்கள் | 1. | அக். 12 | திருமங்கலம் |
| | 2. | அக். 14 | சிவகாசி |
| குடும்ப மனமகிழ்ச்சி முகாம்கள் – | 1. | செப். 22 | சாத்தூர் |



# ரோமாபுரியார்க்கு எழுதின நிருபத்தில் நாம் செய்யக் கூடாதவைகள்

சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

1. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படாதிருங்கள். 1:18
2. மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருங்கள். 2:1
3. கோபாக்கினையைச் செலுத்துகிற தேவன் அநீதராயிருக்கிறார் என்று சொல்லாதிருங்கள். 3:5
4. தேவனிடத்தில் அநீதி உண்டென்று சொல்லாதிருங்கள். 9:14
5. தேவனுக்கு முன்பாக மேன்மை பாராட்டாதிருங்கள். 4:2
6. விசுவாசத்திலே பலவீனமாய் இருக்காதிருங்கள். 4:19
7. தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவிசுவாசமாய் சந்தேகப் படாதிருங்கள். 4:20
8. நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆள இடங்கொடாதிருங்கள். 6:12
9. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக் கொடாதிருங்கள். 6:13
10. நீங்கள் நியாயபபிரமாணத்திற்குக் கீழ்ப்படாதிருங்கள். 6:14,15
11. மரணத்துக்கேதுவான பாவத்துக்கு கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடாதிருங்கள். 6:16
12. அக்கிரமத்தை நடப்பிக்கும்படி நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும், அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடாதிருங்கள். 6:19
13. மாம்சத்தின்படி நடவாதிருங்கள். 8:1,4,5
14. நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராதிருங்கள். 8:9
15. மாம்சத்தின்படி பிழைக்காதிருங்கள். 8:13
16. திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியை பெறாதிருங்கள். 8:15
17. தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டாதிருங்கள். 8:33
18. தேவன் தெரிந்து கொண்டவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதிருங்கள் 8:34
19. கிறிஸ்துவின் அன்பை விட்டு பிரிந்து விடாதிருங்கள். 8:36
20. தேவ வசனம் அவமாய்ப் போயிற்றென்று சொல்லாதிருங்கள். 9:6
21. தேவனின் சித்தத்திற்கு எதிர்த்து நில்லாதிருங்கள். 9:19
22. தேவனோடு எதிர்த்துத் தர்க்கியாதிருங்கள். 9:20
23. உருவாக்கப்பட்ட வஸ்துவாகிய நீங்கள்; நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லாதிருங்கள். 9:20
24. கிறிஸ்துவை இறங்கி வரப்பண்ணும்படி பரலோகத்திற்கு ஏறுகிறவன் யார்? என்று உள்ளத்திலே சொல்லாதிருங்கள். 9:20

25. கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறி வரப்பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார் என்று உள்ளத்திலே சொல்லாதிருங்கள். 10:7
26. தேவன் தம்முடைய ஜனங்களை தள்ளிவிட்டாரோ என்று கேளாதிருங்கள். 11:1
27. ஒட்டப்பட்ட கிளையாகிய நீங்கள் முறித்துப்போடப்பட்ட கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டாதிருங்கள். 11:18
28. நீங்கள் வேரைச் சுமக்காமல் வேர் உங்களை சுமக்கிறது என்பதை மறவாதிருங்கள். 11:18
29. மேட்டிமைச் சிந்தையாயிராதிருங்கள். 11:20
30. நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாதிருங்கள். 12:2
31. உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாதிருங்கள். 12:3
32. மேட்டியானவைகளைச் சிந்தியாதிருங்கள். 12:16
33. உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். 12:16
34. ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். 12:17
35. நீங்கள் பழிவாங்காதிருங்கள். 12:19
36. நீங்கள் தீமையினாலே வெல்லப்படாதிருங்கள். 12:21
37. ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள். 13:8
38. களியாட்டும், வெறியும், வேசித்தனமும், காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாதிருங்கள். 13:13
39. துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாதிருங்கள். 13:14
40 ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். 14:13
41. உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். 14:16
42. பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடக்காதிருக்க வேண்டும். 15:1
43. புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப் பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் உங்களைக் கொண்டு நடப்பித்தவைகள் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல துணியாதிருங்கள். 15:18
44. மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டாதிருங்கள். 15:21
45. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் உங்கள் வயிற்றுக்கே ஊழியஞ் செய்யாதிருங்கள். 16:18
46. நய வசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சியாதிருங்கள். 16:18

## தேவை ஜெபியுங்கள்

ஆலயமில்லாத கிராமங்களில் நற்செய்தி கூட்டங்கள், வாலிபர், சிறுவர் முகாம்கள் நடத்த மின்சார ஜெனரேட்டர்கள் தேவை. ஒரு 5KV ஜெனரேட்டரின் மதிப்பு ரூ. 1,50,000/- இரண்டு ஜெனரேட்டரின் மதிப்பு ரூ. 3,00,000/- தேவையை தாங்க முன் வருகிறவர்களை ஜெபத்துடன் தாங்க அழைக்கிறோம்.



## *பணித்தளங்களில் தேவன் செய்த கிரியைகளுக்காய் தேவனைத் துதிப்போம்.*

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **ஆண்டாள்நகர் –** சகோதரி அம்பிகா தகப்பனார் குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுதலை தந்து, குடியை மறக்கச் செய்ததற்காக தேவனைத் துதிப்போம். சகோதரி. மார்க்கிரேட் அம்மா சரீரத்தில் பெலவீனங்கள் நீக்கி தேவன் சுகம் கொடுத்ததற்காகத் தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **பேட்மாநகரம்** – சகோதரி. மேரி அவர்களுக்கு சரீர பலவீனம் நீங்கி ஆகாரம் உண்ண உதவி செய்த கிருபைக்காய் தேவனைத் துதிப்போம். குழந்தை இயேசுராஜாவுக்கு வியாதியிலிருந்து பரிபூரண சுகம் கொடுத்த தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **புதுக்கோட்டை** – சகோதரி. செல்விக்கு கர்த்தர் பெண் குழந்தையைக் கொடுத்ததற்காகத் தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **மைப்பாறை –** ஆலயத்திற்கு புதிய ஆத்துமாக்கள் நான்குபேர் வருகிறார்கள். இவர்கள் ஞானஸ்நானம் எடுக்க ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். அதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

பணித்தளம் : **அய்யனேரி** : சகோதரி. காளீஸ்வரிக்கு நிரந்தரமான வீடு வேண்டும் என்று ஜெபித்தோம். தேவன் வீடும், இடமும் வாங்க கிருபை செய்தார். பிள்ளையார்நத்தம் – சகோதரி. எலிசபெத்துக்கு ஏற்ற துணையைக் கொடுத்து திருமணத்தையும் தேவன் நடத்தினார். முதல் சனிக்கிழமை நடைபெற்ற உபவாச ஜெபத்தில் 15க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ள தேவன் கிருபை செய்தார்.

### மதுரை மாவட்டம்

பணித்தளம் : **திரளி** – மேலக்கோட்டை உபவாச ஜெபத்தில் பங்கு கொள்ளும் விஜி அம்மாவுக்கு டைபாய்டு காய்ச்சலிலிருந்து தேவன் விடுதலை கொடுத்ததற்காக... ஜெபா கணவர் இரட்சிக்கப்பட்டதற்காக... ரூத் அவர்கள் கணவருக்கு நல்ல வேலை கிடைத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

### விருதுநகர் மாவட்டம்

பணித்தளம் : **பண்டிதன்பட்டி – அப்பையர்நாயக்கர்பட்டி** – சகோதரி. உமா மகேஸ்வரிக்கு சென்னையில் ஆசிரியர் பணி கிடைத்ததற்காகத் தேவனைத் துதிப்போம்.

மல்லி : சகோ. ஆன்ட்ரூஸ் புதிய இல்லம் கட்டி பிரதிஷ்டை செய்து முடித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம் –** சக்திவேல் என்ற சிறுபையனுக்கு கிட்னி பிரச்சனையிலிருந்து விடுதலை கொடுத்த கர்த்தரை துதிப்போம்.

**மேட்டூர்** – ஆலடியம்மா அவர்களுக்கு 21 முறை விண்ணப்பம் கொடுத்தும் முதியோர் பென்ஷன் கிடைக்கவில்லை. 22வது முறை இயேசுவின் நாமத்தில் ஜெபித்து கொடுத்தபின் முதியோர் பென்ஷன் கிடைக்க தேவன் கிருபை செய்தார்.

பணித்தளம் : **சிவகாசி ரூரல்** – ஜெபப்பிரியா என்ற மாணவியின் வாழ்க்கையில் கர்த்தர் கொடுத்த மாற்றத்திற்காய் கர்த்தரைத் துதிப்போம். திருமதி. பிரேமா என்பவரின் மரணபடுக்கையில் கர்த்தர் தூக்கிவிட்டபடியினால் கர்த்தரைத் துதிப்போம்.

பணித்தளம் : **என் திருவேங்கடபுரம்** – **இராஜபாளையம்** – சகோதரன் ஈசாக்கு பணித்தளத்த்துக்கு வந்து உடைந்துபோன நடை பாலத்தைக் கட்ட பண உதவி செய்து பாலத்தை கட்டி முடிக்க தேவன் கிருபை செய்தார்.

**ஆர். ரெட்டியப்பட்டி** – சகோதரி. பிரேமாவுக்கு ஏற்கனவே வேலை பார்த்த ஆஸ்பத்திரியில் மீண்டும் வேலை பார்க்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

## *பணித்தளங்களுக்காய் முழங்காலில்*

தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **ஆண்டாள்நகர்** – திம்மராஜபுரம், சமத்துவபுரம், மேலக்கூட்டுடன்காடு, முருகன்நகர் ஆகிய இடங்களில் நடைபெறும் ஊழியங்கள் மூலம் புதி நபர்கள் சந்திக்கப்பட.... ஆண்டாள்நகர் கமலா அம்மாவிற்கு சரீரத்தில் காணப்படும் உப்புசத்து மாறவும்.... கிட்னி இரண்டும் சுறுங்கி சாப்பாடு இல்லாமல் கஷ்டப்படுகிற தெய்வானை அம்மாவிற்கு தேவன் நல்ல சுகத்தை கொடுக்க ஜெபிப்போம்.

பணித்தளம் : **பேட்மாநகரம்** – சுந்தரலிங்கநகர் – சகோ. முத்துசெல்வத்திற்கு காணப்படுகிற இளப்பு நோயிலிருந்து தேவன் விடுதலை தரவும் இவர் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

பணித்தளம் : **சுப்பிரமணியபுரம்** – சக்கம்மாள்புரத்தைச் சேர்ந்த சகோதரி பால்தங்கம் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் தேவன் அருளவும், சகோதரி மேகலாவுக்குத் திருமணம் நடைபெறவும் ஜெபிப்போம்.

பணித்தளம் : **திருக்களூர்** – சகோதரி. தெபோராள் அவர்களுக்கு வயிற்றுவலி (கல் அடைப்பு) வியாதியிலிருந்து தேவன் விடுதலை தர ஜெபிப்போம்.

பணித்தளம் : **புதுக்கோட்டை** – இங்கு 13 கிராமங்களில் நடைபெற்ற VBSல் கலந்து கொண்ட சிறுவர்களுக்கு சிறுவர்முகாம் நடத்த ஏற்றஇடம் கிடைக்க, தேவைகள் சந்திக்கப்பட... இங்கு நடைபெற்ற மாணவர்கள் ஊழியத்தின் மூலம் அநேக மாணவர்கள் மனந்திரும்ப... அற்புதத்தின் மாலையில் கலந்து கொள்கிற குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட.... சகோதரி. கவிதா பிரின்ஸிக்கு கர்த்தர் ஏற்ற வேளையில் குழந்தை பாக்கியம் கொடுக்க ஜெபிப்போம். **திருப்புளியங்குடி** – கட்டிக் கொண்டிருக்கிற ஜெபவீடு தேவைகள் எல்லாம் சந்திக்கப்பட்டு சீக்கிரத்தில் தடையின்றி கட்டிமுடிக்கப்பட.... மோசஸ், மாலதி, சண்முகசுந்தரி இவர்களுக்கு ஏற்ற துணைகள் கிடைக்க.... பிரபா, உஷா, மாரி செல்வி இவர்களுக்கு வேலை கிடைக்க ஜெபிப்போம்.

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல்** – திருமணத்திற்காக காத்திருக்கிற மதிசெல்வம், ஏஞ்சலின் ஜெபா நவமணி, பிரியா இவர்களுக்காகவும், நர்கிஸ், ஜினிகமல், பாலின்கமல் இவர்களுக்கு குழந்தை பாக்கியத்திற்காக... பல வருடங்களாக நிரந்த வேலை இல்லாமல் காத்திருக்கிற சகோ. பிரபாகரனுக்கு நல்ல வேலை கிடைக்க, சகோ. தேவதாஸ் இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். தேவன் விடுதலை கொடுக்க ஜெபிப்போம்.

பணித்தளம் : **அழகப்பபுரம்** – அப்பாத்துரை நடக்க முடியாமல், வாய்பேச முடியாமல் கஷ்டப்படுகிற இவருக்கு தேவன் அற்புதம் செய்ய, சகோதரி. புஷ்பலதா என்பவரது இரண்டு மகன் வளர்ச்சியில்லாமல், கழுத்து பெலப்படாமல் இருக்கிறான். தேவன் அற்புதம் செய்ய ஜெபிப்போம்.



**மைப்பாறை** – ஜெய மணியம்மாள் மகன் கோயமுத்தூரில் தொடங்க உள்ள தொழிலை தேவன் ஆசீர்வதிக்கவும், ரெட்டிப்பட்டி ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**அய்யநேரி : புளியங்குளம்,** மாரியப்பன், சுப்புலட்சுமி மகன் வனிதா, மகன் மகேஸ்வர் இவர்களுக்கு கர்த்தர் கர்ப்பத்தின் கனியைத் தரவும், கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை கிடைக்கவும், சிப்பிப்பாறை – எபநேசர், கிருபா இவர்களுக்கு கர்த்தர் கர்ப்பத்தின் கனியை தரவும் ஜெபிப்போம்.

**திருவேங்கடம்** – சின்னக்காளான்பட்டியில் நடைபெறுகிற ஆலய வேலைகள் தடையின்றி நடைபெற, சீக்கிரத்தில் கட்டி முடிக்கப்பட... திரு. வேலுச்சாமிக்கு நல்ல கண்பார்வை கிடைக்கவும், இவர் குறி சொல்லுதலை விட்டு இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம். **உமைத்தலைவன்பட்டி** – திரு. அருணாசலம் குடும்பத்தில் பிரச்சனைகள் மாறி இருவரும் சமாதானமாய் இணைந்து வாழ ஜெபிப்போம்.

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **தோப்புப்பட்டி** – சகோதரி. மானம்மாள் கால் உடைந்து நடக்கமுடியாமல் படுத்த நிலையில் இருக்கிறார்கள். தேவன் சுகம் கொடுத்து எழுந்து நடக்க ஜெபிப்போம். நமது மிஷனெரி சகோதரி. எப்சிபாவுக்கு சுகபிரசவத்தை தேவன் அருள ஜெபிப்போம்.

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி** – தேவன் இல்லையென்று சாதிக்கிற செல்வராஜ், விதுபால் இருவரும் இரட்சிக்கப்பட... மெர்லின், மீனா குடும்பத்தில் சமாதானம் உண்டாக.... கணபதி மகன் குடல்வால் வியாதிலிருந்து தேவன் விடுதலை கொடுக்க... எப்சிபாவுக்கு இரட்சிக்கப்பட்ட மணமகன் கிடைக்க, தடைகள் மாற ஜெபிப்போம்.

**அரியலூர் மாவட்டம்**

பணித்தளம் : **வெத்தியார் வெட்டு (மிஸ்பா)** – சகோ. ரங்கநாதன் ஆசாரி சபைக்கு வருகிறார்கள். இவர்கள் மனைவி இரண்டு மகன்களும் மனந்திரும்பி சபைக்கு வர ஜெபிப்போம். விழுப்பள்ளம், தென்வீக்கம், கல்லாத்தூர் இப்பகுதியில் உள்ள மக்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **என் திருவேங்கடபுரம்** – பணித்தளத்தில் புதிய ஞானஸ்நான தொட்டி கட்டப்பட, சகோ. ஈசாக்கு பிள்ளைகள் குடும்பத்தில் சமாதானம் உண்டாக, சகோ. பவுல் அடிக்கடி சுகவீனம் அடைகிறார். தேவன் பெலன் சுகம் கொடுக்க, வியாபாரம் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

பணித்தளம் : **சிவகாசி** – திருமதி. திவ்யா என்பவரின் பிரசவ தேவைகள் சந்திக்கப்படவும், சுகபிரசவம் ஆகவும், முனியசாமி என்ற வாலிபர் இரட்சிக்கப்பட, பெற்றோருக்கு கீழ்ப்படிய

பணித்தளம் : **சாத்தூர் ரூரல்** – சந்தணகுமார் அவர்களின் குடும்பத்திலுள்ள கடன் பிரச்சனைகள் மாறவும், ஆலயத்திற்கு வரமுடியாதபடி இருக்கும் தடைகள் மாறவும், சகோ. சுப்புராஜ் அவர்கள் இரட்சிக்கப்படவும், பொருளாதார பிரச்சனைகள் சந்திக்கப்படவும்...

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்** – சாமித்தேவன்பட்டி – மாரித்தாய் அவர்களது கணவரும், பிள்ளையும் ஆக்ஸிடென்டில் ஒரே நாளில் ஒரே சமயத்தில் இறந்து போய்விட்டார்கள். அதினிமித்தம் காணப்படுகிற வேதனைகள் நீங்க.... பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட...

**ரெட்டியார்பட்டி** – சகோதரி. ராஜாத்தி பி.ஏ. படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார். நல்ல வேலை கிடைக்க, சகோதரி. ரேணுகாவிற்கு திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

பணித்தளம் : **புல்லலக்கோட்டை** – நல்ல மண் நாயக்கன்பட்டியில் ஊருக்குள்ளே, சிறுவர்ஊழியம், சுவிசேஷம் செல்வதற்கு தடைபண்ணுகிற வாலிபர்கள் மனந்திரும்பும்படியாகவும், நந்திரெட்டிபட்டியில் ஊழியம் செய்ய காணப்படுகிற எதிர்ப்புகள் மாறவும் ஜெபிப்போம்.

பணித்தளம் : **பண்டுதன்பட்டி** – சகோ. ஆறுமுகத்திற்கு திருமணத்தடைகள் மாற, நாகபாளையம் சகோ. மல்லிகா– பாலமுருகன் இவர்கள் குடும்பத்தில் சமாதானம் உண்டாக.... இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி – பூச்சக்காபட்டி** – சகோதரி. சாந்தா, சௌந்தர்யா, கோகுல், பஞ்சவர்ணம் ஆகியோர் இரட்சிக்கப்பட... சகோ. சிவகுமாருக்கு ஏற்ற வேளையில் திருமண காரியத்தை தேவன் வாய்க்கப்பண்ண... கல்போது – சகோதரி அன்னபாக்கியத்திற்கு ஏற்றவேளையில் திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

பணித்தளம் : **பழைய அப்பநேரி** – சாமிதேவன்பட்டி – சகோ. மாரிக்கண்ணு திருமணம் ஆகி 8 வருடம் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லை. தேவன் அற்புதம் செய்ய ஜெபிப்போம். கரிசல்பட்டி – சக்திகண்ணன், கிருஷ்ணவேணி இவர்கள் இரட்சிக்கப்பட... இவர்களுக்கு குழந்தை பாக்கியம் கர்த்தர் அருள ஜெபிப்போம்.

பணித்தளம் : புல்லக்கவுண்டன்பட்டி – ஆலய ஆராதனைக்கு கடந்து வருகிற விசுவாச குடும்பங்களின் தேவைகள் சந்திக்கப்பட, விவசாயங்கள் ஆசீர்வதிக்கப்பட, வெடி ஆபீஸ் ஆபத்தினின்று ஆசீர்வாதமாக மாற ஜெபிப்போம். கர்ப்பத்தின் கனிக்காக காத்திருக்கிறவர்களுக்கு தேவன் அற்புதம் செய்ய ஜெபிப்போம்.

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை** – அன்பின் நகரம் – அலெக்ஸாண்டர் என்ற சிறுபையனுக்கு பிறந்ததிலிருந்து வயிற்று பகுதியில் வீக்கம் காணப்படுகிறது. வீக்கம் மாறி நல்ல சுகம் உண்டாக....

பழைய ஏழாயிரம்பண்ணை – காளீஸ்வரி என்ற சகோதரி 6 வருடம் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லை, தேவன் கர்ப்பத்தின் கனி அருள, பாக்கியம் சகோதரியின் பிள்ளைகளுக்குள் சமாதானம் உண்டாக ஜெபிப்போம்.


**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**
**தேவனுடைய கூடாரத்தின் 20வது பிரதிஷ்டை தினமும் திறப்பின் வாயில் ஜெபமும்**

2013 நவம்பர் 27 கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய

*தேவசெய்தி :* **சகோ. P. சாம்ராஜ்** ரேமா ஊழியங்கள், நெல்லை
**சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

**நீங்களும் வாருங்கள்!** **கலந்து கொள்ளுங்கள்!**

**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

கூட்டம் முடிந்தவுடன் அன்பின் விருந்து உண்டு

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194




## "நீங்கள் கேட்க விரும்பாதவை"

**Dr. பொ. செல்வராஜ்** கோவை

டெய்ஸி : அவளுக்கு வேற வேலையில்ல, Cabbage...

டேவிட் : அப்படியெல்லாம் பெயர் சொல்லக்கூடாதும்மா....

டெய்ஸி : என்ன, Uncle? விளையாட்டாத்தானே சொன்னேன்?

டேவிட் : டெய்ஸி, ஒரு பழமொழி உண்டு. Sticks and stones may break my bones but names will never hurt me...

டெய்ஸி : பாத்தீங்களா, நீங்களே ஒத்துக்கிட்டீங்க...

டேவிட் : wait, wait, நான் இன்னும் சொல்லி முடிக்கல...

டெய்ஸி : என்ன சொல்றீங்க, uncle? எனக்கு ஒன்னும் புரியலயே...

டேவிட் : இந்தப் பழமொழி மட்டுமில்ல, டெய்ஸி, பல பழமொழிகள் முரண்பாடாத்தான் இருக்கு...

டெய்ஸி : அப்படீன்னா...?

டேவிட் : சொற்களும் புண்படுத்தக்கூடும். அதைத்தான் சொன்னேன். அதைப்பற்றி Bible-லே பல வசனங்கள் இருக்கு...

டெய்ஸி : நானும், வாசித்திருக்கிறேன், செய்திகள்லே கேட்டிருக்கிறேன். ஆனா அதெல்லாம் வேறு அர்த்தமுள்ளதுன்னு நினைத்தேன்...

டேவிட் : நான் பள்ளி மாணவனா இருந்தபோது Boys, Girls-ஐ "பட்டப்" பெயர் சொல்லிக் குறிப்பிடுவதுண்டு...

டெய்ஸி : எங்க Schoolலேயும் அப்படித்தான் Uncle...

டேவிட் : Girls பொதுவா அதை விரும்பவில்லை. ஒரு மாணவன், ஒரு மாணவியை "நடிகை" என்று குறிப்பிட்டபோது அந்த மாணவி அழுது நடித்து ஆசிரியரிடம் அந்த மாணவனை மாட்டிவிட்டுவிட்டாள்...

டெய்ஸி : இப்பல்லாம் நாங்க அதையெல்லாம் Seriousஆக எடுத்துக் கொள்வதில்லை...

டேவிட் : உன்னை யாராவது பட்டப்பெயர் சொல்லி அழைப்பதை நீ விரும்புவாயா? உண்மையைச் சொல்லு

டெய்ஸி : நிச்சயம் விரும்பமாட்டேன், Uncle...

டேவிட் : The Large Catechism என்கிற புத்தகத்திலே பட்டப்பெயர் சொல்லி அழைப்பதை மார்ட்டின் லூத்தர் "குப்பைப் பேச்சு" (Trash Talking) என்று அழைக்கிறார். அப்படிப் பேசுவது நாவினால் செய்யப்படும் பாவமென்றும் பொய்சாட்சி கூறுவதும் அப்படிப்பட்ட பாவமே என்றும் அவர் எழுதியிருக்கிறார்...

டெய்ஸி : நாவினால் சுட்டவடு ஆறாது என்கிறது வள்ளுவர் வாக்கு. பொதுவா நம்மைப்பற்றி மற்றவங்க நல்லாப் பேசனும்னு நாம் எதிர்பார்க்கிறோம். ஆனா, மற்றவங்களைப் பத்தி நாம....

டேவிட் : Exactly, நாம் மற்றவங்களுக்குத் தங்கமானவங்க, ஆனா மற்றவங்களை யாராவது தங்கம்னு குறிப்பிட்டா அது நமக்குப் பொறுக்காது. அதுதான் மனிதர்கள் நடுவில பரவியிருக்கும் கடுமையான தொற்றுநோயின்னும் மார்ட்டின் லுத்தர் எழுதியிருக்கிறார்.

டெய்ஸி : உண்மைதான், Uncle யாக்கோபு நிருபத்தில நாவு ஒரு நெருப்பு. அது காட்டைக் கூட அழித்துவிடும். அது அநீதி நிறைந்த உலகம்னு எவ்வளவு ஆணித்தரமா சொல்றாரு...

டேவிட் : ஏப்ரல், பிராண்டன், கேஸி, ஜேரட், கோரின், கிறிஸ்டினா, ரையன், ஜுலியன்....

டெய்ஸி : இந்த எட்டுபேரும் யார், Uncle?...

டேவிட் : அவர்களைப் பற்றி அதிகமாத் தெரியாது, ஆனா, அந்த எட்டுபேருக்கும் ஒரு ஒற்றுமையிருக்கு...

டெய்ஸி : என்ன, uncle?...

டேவிட் : டெய்ஸி Shock ஆயிடாதே. அந்த எட்டுபேரும் கொடூரமான கிண்டல், கேலியினால் தற்கொலை செய்து கொண்டவங்க? .... தற்கொலை செய்வது பாவம்ன அவங்களுக்குத் தோணலயே...

டெய்ஸி : அதுக்குக் காரணமாயிருந்தவங்க யார், uncle?...

டேவிட் : வேற யாரு, அவங்க classmates-தான். டெய்ஸி schoolலேயும், classroomலேயும் கவனமா இருக்கணும் என்ன?....

டெய்ஸி : சரி, uncle. Thanks uncle ...

டேவிட் : பட்டப் பெயரிட்டு அழைப்பதுலே மக்கள் இப்பல்லாம் ரொம்ப, ரொம்ப முன்னேறிட்டாங்க....

டெய்ஸி : எப்படி uncle?...

டேவிட் : தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் புதிய புதிய பட்டப்பெயர்களச் சொல்லி நிந்திக்கப் பழகிட்டாங்க....

டெய்ஸி : ஏவாள்கிட்ட சாத்தான் பேசியதப்போல, பாபேலைக் கட்ட ஆரம்பிச்சபோது நடந்ததைப் போல, யூதாஸ் இயேசுவை முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்ததப் போல

டேவிட் : பரவாயில்லையே, Bible-ல strong ஆக இருக்கியே regular-ஆக வாசித்து, தியானிக்கணும். என்ன?...

டெய்ஸி : சரி, uncle. சங்கீதங்கள்ல தேவன் இல்லையென்னு மதிகேடன் (முட்டாள்) தன் இருதயத்தில் சொல்லிக் கொள்வான்னு சொல்லியிருப்பதப்போல

டேவிட் : அத ஏன் கேக்கிற, வெளிப்படையாவே பேசுறாங்க, எழுதுறாங்க. அதுவும் பெரிய, பெரிய நோய்களுக்கு பயப்படுவதுபோக சின்னக் காய்ச்சல் வந்தாலே Swine Flu-ஆக இருக்குமோ என்று மனிதன் பயப்படுற இந்தக் காலத்திலயா

இருவரும் : தேவபயம் எங்கே?



## கட்டப்பட்டுவரும் ஆலயங்கள் மற்றும் ஊழிய கட்டிடப் பணிக்காக ஜெபியுங்கள்

1. தூத்துக்குடி மாவட்டம் திருப்புளியங்குடி, வேம்படிவிளை மிஷனெரி ஜெப ஆலயம் கட்டிடப்பணி முடிந்து பூச்சு வேலை முடிந்துள்ளது. தளம் போடுதல், வயரிங் வேலை, ஜன்னல் மற்றும் வாசல் கதவுகள் அமைக்கப்பட வேலைகள் முடிக்கப்பட ஜெபியுங்கள். இங்கு நமது ஜெபவீடு மெயின் ரோட்டில் அமைவதால் யாவரும் ஜெபிக்க வரும்வண்ணம் உள்ளது. எனவே அதன் தளத்தை Tiles போட்டு அமைக்க ஜெபித்து வருகிறோம். அதன் தேவை சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
2. நெல்லை மாவட்டம், சின்னக்காளான்பட்டி மிஷனரி ஆலய பணி அஸ்திபார வேலைகள் முடிவு பெற்று கட்டிட வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வேலைகள் தொடர்ந்து தடையில்லாமல் நிறைவேற்றி முடிக்கப்பட ஜெபியுங்கள். இங்கு மிஷனெரி இல்லம் கட்டிமுடிக்கப்பட்டு அதற்கு மின்இணைப்பு கிடைக்க ஜெபியுங்கள்.
3. தூத்துக்குடி மாவட்டம், பேட்மா நகரம், ஸ்ரீமூலக்கரை மிஷனெரி ஆலய கட்டிடப் பணிகள் சர்வே பணி முடிக்கப்பட்டு, ஆலயக் கட்டிடப்பணி தொடங்கப்பட உள்ளது. ஜெபியுங்கள்.
4. சாத்தூர் பணித்தளத்தில் மிஷனெரி இல்ல கட்டுமானப்பணி நடைபெறுகிறது. தற்போது அஸ்திபாரப்பணி முடிந்துள்ளது. மற்றப்பணி தொடங்கப்பட, தேவை சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
5. அழகப்பபுர பணித்தளத்தில் ஆலய விரிவாக்கப்பணி தொடங்கப்பட்டு அஸ்திபாரப்பணி நடைபெற்று வருகிறது. தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
6. ஆண்டாள்நகர் பணித்தளத்தில் சுற்றுசுவர் (Compound Wall) அமைக்கும் பணி துவங்கப்பட்டு உள்ளது. வேலை துரிதமாய் நடைபெற ஜெபியுங்கள்.
7. புல்லலக்கோட்டை மிஷனெரி இல்லத்திற்கு மின் இணைப்பு பெற ஆயத்தங்களை செய்து வருகிறோம். சீக்கிரத்தில் மின்இணைப்பு கிடைக்க ஜெபியுங்கள்.
8. புல்லக்கவுண்டன்பட்டி மிஷனெரி இல்லத்திற்கு 1-10-2013 அன்று தேவன் மின் இணைப்பு தந்ததற்காக தேவனைத் துதியுங்கள்.
9. நமது தலைமை அலுவலகத்தில் ஊழியர் இல்லங்கள் இரண்டும் ஜெப ஹாலும் கட்டப்படும் பணி நடைபெற்று வருகிறது. ஊழியர் இல்லங்களுக்கு மேல்கூரை கான்கிரீட் போடப்பட வேண்டும். அதற்காக ஜெபியுங்கள்.
10. நமது தலைமை அலுவலகம் புதுப்பிப்பு மற்றும் பெயிண்டிங் வேலைகள் நடைபெற்று வருகிறது. சீராய் நடைபெற்று முடிய ஜெபியுங்கள்.
11. ஏழாயிரம்பண்ணை, தேவனுடைய கூடாரத்தில் நற்செய்தி கூட்ட மைதானம் ஒன்றை ஆயத்தப்படுத்தி வருகிறோம். மேலும் நற்செய்தி கூட்ட மேடை ஒன்று கட்டப்பட வேண்டும். ஒரு கிறிஸ்தவ புத்தக நிலையம் அமைக்க ஒரு அறை கட்டப்பட வேண்டும். அதற்காக ஜெபியுங்கள். தாங்குகள்.

## கட்டப்பட வேண்டிய ஆலயங்களுக்காக ஜெபியுங்கள்.

1. நள்ளி, விருதுநகர் மாவட்டம் 2. கன்னித்தேவன்பட்டி, விருதுநகர் மாவட்டம்
3. தொட்டிப்பாளையம், திருப்பூர் மாவட்டம் – ஆகிய இடங்களில் கட்டிட அனுமதி பெற தேவன் கிருபை பாராட்டியுள்ளார். ஆலய கட்டுமானத்தை தாங்குகிற மக்கள் முன்வர ஜெபியுங்கள்.

## ஆலய கட்டிட அனுமதி கிடைக்க ஜெபியுங்கள்

1. திருவேங்கடம், நெல்லை மாவட்டம் இங்கு மிஷனெரி இல்லம் கட்டப்பட்டுவிட்டது. மிஷனெரி ஆலயம் கட்ட கலெக்டர் அனுமதி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தாமதிக்கப்படுகிறது. தடைநீங்க ஜெபியுங்கள்.
2. அய்யனேரி, தூத்துக்குடி மாவட்டம் இங்கு ஆலயம் கட்ட அனுமதி தர மூன்று ஆண்டுகளாக தாமதிக்கும் பஞ்சாயத்து தலைவர் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

## தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்

**நாள் : 2013 அக்டோபர் 29 – கடைசி செவ்வாய்**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**
**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

*தேவசெய்தி :* **சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

## வாழ்த்துகிறோம்

நமது அழகப்பபுரம் பணித்தளத்தில் விசுவாச குடும்பமான திரு. துரைசிங்கம் – திருமதி வளர்மதி அவர்கள் மகள் செல்வி. திவ்யா – செல்வன் ரூபசேகருடன் 9-10-2013 அன்று திருமணத்தில் இணைக்கப்பட்டார். மணமகள் திவ்யா நமது ஊழியத்தில் VBS மற்றும் முகாம்களில் மிகுந்த வாஞ்சையுடன் ஜெபத்துடன் தன்னார்வ பணியாளராக பணியாற்றி வருகிறவர். தேவன் மணமக்களை ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**ஜெபியுங்கள்!**

**சிறுவர் குதூகல முகாம்கள்**

5. நவ. 14 ஆண்டாள் நகர்
6. நவம்பர் 23 தாதன்குளம்
7. நவம்பர் 24 ஜமீன் சல்வார்பட்டி
8. நவம்பர் 30 ஆயத்துறை
9. டிச. 1 பண்டுதன்பட்டி
10. டிசம்பர் 28 ஏரல்

**நற்செய்தி கூட்டங்கள்**

நவ. 10,11,12 மும்பை டோம்பிவிலி CNI

**மருத்துவ முகாம்**

1. நவம்பர் 17 N. திருவேங்கிடபுரம்

**ஜெபியுங்கள்!**

**வாலிபர் வெற்றி முகாம்கள்**

3. நவ. 14 சுப்பிரமணியபுரம்
4. நவம்பர் 17 பெரியநாயகபுரம்
5. டிசம்பர் 01 விசுவாசபுரம்

**குடும்ப மனமகிழ்ச்சி முகாம்கள்**

2. நவம்பர் 9 தோப்புப்பட்டி
3. நவம்பர் 17 என். திருவேங்கிடபுரம்
4. நவம்பர் 24 புல்லக்கவுண்டன்பட்டி
5. டிசம்பர் 1 ஆண்டாள் நகர்
6. டிசம்பர் 1 ஸ்ரீமூலக்கரை

**மாணவர் முகாம்**

1. நவம்பர் 23 பண்ணைவிளை



## நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

கடிதம் மற்றும் M.O. அனுப்ப தொடர்பு முகவரி :

**சகோ. B. பொற்செல்வன் ஆசீர்**
**கிருபையின் ஊழியங்கள்,** ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி-628 101.
Grace Ministries, Abraham Nagar, Periyanayagapuram, Tuticorin-628 101.

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

## செய்திகள்

- கிரீஸ் நாட்டில் மொத்த வேலையில்லாதவர்கள் 27 சதவிகிதத்தினர். இவர்களில் 62.5 சதவிகிதத்தினர் இளைஞர்கள்.
- போர்ச்சுகல் நாட்டில் மொத்த வேலையில்லாதவர்கள் 17.8 சதவிகிதத்தினர். இவர்களில் 42.5 சதவிகிதத்தினர் இளைஞர்கள்.
- நெதர்லாந்து நாட்டில் மொத்த வேலையில்லாதவர்கள் 6.5 சதவிகிதத்தினர். இவர்களில் 10.6 சதவிகிதத்தினர் இளைஞர்கள்.
- ஸ்பெயின் நாட்டில் மொத்த வேலையில்லாதவர்கள் 26.8 சதவிகிதத்தினர். இவர்களில் 56.4 சதவிகிதத்தினர் இளைஞர்கள்.
- இத்தாலி நாட்டில் மொத்த வேலையில்லாதவர்கள் 12 சதவிகிதத்தினர். இவர்களில் 40.5 சதவிகிதத்தினர் இளைஞர்கள்.
- ஜெர்மனி நாட்டில் மொத்த வேலையில்லாதவர்கள் 5.4 சதவிகிதத்தினர். இவர்களில் 7.5 சதவிகிதத்தினர் இளைஞர்கள்.
- சுமார் 6 லட்சம் இஞ்சினியர்கள் MBAக்கள் ஆண்டுதோறும் புதியதாக இந்தியாவில் படித்து வருகின்றனர். மேலும் 30 இலட்சம் பிற பட்டதாரிகளும் இந்தியாவில் உருவாகுகின்றனர்.
- இந்தியாவில் வேலையும் சம்பளமும் கொண்ட இந்திய பணியாளர்களின் எண்ணிக்கை 35.4 சதவிகிதம். 2013, 2014 இந்தியாவில் வேலை இழப்போர் 5 இலட்சம் பேராயிருக்கலாம் என்று ஒரு கணிப்பு கூறுகிறது.